[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு பரிசீலிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் 24 தொழிற்கூடங்கள் அமைப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லெதர் காம்பளக்ஸ் தொழிற்கூடம் அமைப்பதற்குரிய செயற்குறிப்பு இருக்கின்றது என்று ஏற்கெனவே அறிந்தேன். அது எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் புதியதாக தொழிற்கூடங்கள் கட்டுவது மட்டுமல்லாமல் ஏற்கெனவே திண்டுக்கல்லில் ஒரு பொதுத் தொழிற்பேட்டை இருக்கின்றது. அங்கே 22 தொழிற்கூடங்கள் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தோல் தொழிற் பேட்டை சம்பந்தமான குறிப்பு என்னிடத்திலே இல்லை. அது தொடர்பாக விசாரித்து தகவலை அளிக்கிறேன்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் மூலம் குழந்தைகள் உணவு தயாரிக்கும் திட்டம்.

*வினா எண் 5—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பால்வள நிறுவனம் குழந்தைகள் உணவு பொருட்களை (Baby food) தயாரிக்க ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத்தில் உள்ள அமுல் பவுடர் சொசைட்டி போன்று தமிழ்நாட்டில் ஒரு சொசைட்டியை ஏற்படுத்தி, பாலிலிருந்து பால்பொருள்கள் தயாரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரையில் மட்டும் பாலிலிருந்து பால் பவுடர் தயாரிக்கப்பட்டு, பால் பவுடராகவே விற்பனை செய்யப்படுகிறது. அந்த தேவையை மாநிலம் முழுவதும் பூர்த்தி செய்த பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனையை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

1981 ஆகஸ்ட் 22]

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் உணவு தரமான உணவாக கிடைப்பது அரிதாக இருக்கிறது. தரமான உணவாக இருந்தால் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே நம்முடைய அரசு தரமான குழந்தை உணவுகளை குறைந்தவிலையில் தயாரித்து அளிப்பதற்கு ஏன் முன வரக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : குழந்தைகளுக்கு மாவு உணவு கொடுப்பதிலே நிபுணர்கள் மத்தியிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. எனவே எதிர் காலத்திலே குழந்தைகள் உணவை அரசு தயாரித்து அளிப்பது பற்றிய தேவை ஏற்படும்போது இதுபற்றிய முடிவை அரசு எடுக்கும்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தனியார் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்கள் குழந்தைகள் உணவைத் தயாரித்து, அதிக மான விலைக்கு விற்கின்றனர். இதனால் ஏழை எளியவர்கள் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகையினால் தமிழ்நாடு பால்வள நிறுவனமே குழந்தைகள் உணவைத் தயாரித்து ஏழைகள் வாங்கக் கூடிய விலை நிர்ணயித்து விநியோகிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை தமிழக அரசுக்கு எதுவும் தற்போது இல்லை.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "There is no substitute for mother's milk" என்று உலக சுகாதாரக் கழகமே அறிவித்த பிறகு, தாய்ப்பால் கொடுத்து, குழந்தைகளை பராமரிக்கின்ற தாய்மார்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு சப்சிடைஸ்ட் மில்க் வழங்குகிற முறையில், அதாவது அப்படி தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு பால் வழங்கும் யோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் அரசின் கையில் தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சில நவநாகரீக பெண்கள் தாய்ப்பால் இருந்தும், குழந்தைகளுக்குக் கொடுக்காமல் இருப்பதால், அந்தக்

[1981 ஆகஸ்ட் 22

குழந்தைகள் நோஞ்சான்களாக இருக்கின்றன. அதனால் பெண்களுக்கும் புற்று நோய் போன்ற நோய்கள் வருவதாக சொல்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பால்பவுடர் போன்ற குழந்தை உணவுகளை தயாரிக்கும்போது, 'தாய்ப்பால் உணவு தான் குழந்தைகளின் உடல்நலத்திற்கு சிறந்தது' என்று அந்த டின்களில் அச்சடித்து விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சார்பில் இன்றைக்கு எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்கிறார்கள்? அதிலே தன்னிறைவு அடைந்திருக்கிறோமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஏழைத்தாய்மார்கள் தொடர்ந்து தங்களுடைய குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வாங்குவதற்கு ஏற்ற முறையில், விலையைக் குறைத்து விற்பதற்கு பால் பவுடர் உற்பத்தி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று கருதுகிறேன்.

காடுகளில் இறந்துபோகும் யானைகளைப் பரிசோதனை செய்யும் முறை.

*வினா எண். 6—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளில் யானைகள் சுடப்பட்டால் அல்லது செத்துவிட்டால் அதை மிருக வைத்திய நிபுணர்கள் சட்டப்படி பரிசோதனை செய்யும் வழக்கமுண்டா?